ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** புள்ளிவிபரத் திணைக்களம்
**திகதி** 2018.11.02

## மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி – 2017

**முக்கிய அம்சங்கள்**

பெயரளவிலான மொ.உ.உற்பத்தி 2017
**ரூ. 13,317 பில்**

மா.மொ.உ.உற்பத்தி பங்கு 2017

அதிகூடியது
**மேல் மாகாணம்:**
**பங்கு வீழ்ச்சியடைந்து பிராந்திய ஏற்றத்தாழ்வினைச் சுருக்கியுள்ளது**

மாகாண ரீதியான குறிகாட்டிகளைப் பயன்படுத்தி தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆண்டுக்கான பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தித் எண் தொகைகளைப் பிரிப்பதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நாட்டின் பெயரளவிலான மொ.உ. உற்பத்தியின் பாரியளவிலான பங்கிற்கு மேல் மாகாணம் தொடர்ந்தும் வகை கூறியது என்பதனைக் காண்பிக்கின்றது. எவ்வாறாயினும், அண்மைக்காலப் போக்குகளுக்கமைய மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கு வீழ்ச்சியடைந்து 2017இல் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் குறுக்கமடைவதற்கு பங்களிப்புச் செய்தது. மத்திய மற்றும் வட மேல் மாகாணங்கள் பெயரளவிலான நியதிகளில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அதிகூடிய பங்களிப்புச் செய்வதில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை வகித்தன.

2017 காலப்பகுதியின் போது, கிழக்கு, வட மேல் மற்றும் ஊவா மாகாணங்களில் மாகாண மொ.உ. உற்பத்திப் பங்கில் அதிகரிப்புக்களை அவதானிக்கக்கூடியதாகவிருந்த அதேவேளை மேல், தென், வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களில் குறைவடைந்தது. மத்திய மற்றும் வட மாகாணங்களின் பங்குகள் மாறாதிருந்தன.

அட்டவணை 1
மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தி :2016 - 2017

| மாகாணம் | 2016(அ) | 2017(ஆ) |
|---|---|---|
| மேல் | 4,505 | 4,949 |
| மத்திய | 1,268 | 1,428 |
| வட மேல் | 1,251 | 1,412 |
| தென் | 1,185 | 1,317 |
| சப்பிரகமுவா | 968 | 1,060 |
| ஊவா | 859 | 1,047 |
| கிழக்கு | 635 | 754 |
| வட மத்திய | 700 | 749 |
| வட | 536 | 602 |
| **இலங்கை** | **11,907** | **13,317** |

அ. திருத்தப்பட்டது
ஆ. தற்காலிகமானது
மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1
மாகாண மொ.உ.உற்பத்தியின் பங்கு - 2016 - 2017




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மாகாணத்தினுள்ளான பொருளாதார கட்டமைப்புப் பகுப்பாய்வானது பணித் துறையிலிருந்தான பங்களிப்பு 37.8 சதவீதமாக காணப்பட்ட ஊவா மாகாணம் தவிர ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண மொ.உ.உற்பத்திக்கு 50 சதவீதத்திற்கு மேல் பங்களிப்புச் செய்வதில் பணித் துறை நடவடிக்கைகள் ஆதிக்கம் செலுத்தியது என்பதை காண்பிக்கின்றது. ஒவ்வொரு மாகாணத்திலும் பணி நடவடிக்கைகளின் செயலாற்றம் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்துடன் போக்குவரத்து நடவடிக்கைகளில் விரிவுபடுத்தலுடன் இணைந்த முன்னேற்றங்கள் மூலம் பாரியளவு துணையளிக்கப்பட்டிருந்தது. ஊவா மாகாணத்தின் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியானது கைத்தொழில் (44.2 சதவீதம்) நடவடிக்கைகளினால் பாரியளவு தூண்டப்பட்டிருந்தது. இதற்கு சுரங்க மகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் என்பன கணிசமாக பங்களிப்புச் செய்திருந்தன. ஏனைய மாகாணங்களில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கைத்தொழில் நடவடிக்கைகளிலிருந்தான பங்களிப்புக்கள் 16.2 தொடக்கம் 31.5 சதவீதம் வரை வேறுபட்டிருந்தன.

**அட்டவணை 1**
**மாகாண ரீதியான பொருளாதார செயற்பாட்டு[அ] சதவீதப் பங்கு :2016 - 2017[ஆ]**

| மாகாணம் | 2017 | | |
|---|---|---|---|
| | வேளாண்மை | கைத்தொழில் | பணிகள் |
| மத்திய | 9.7 | 22.2 | 58.8 |
| கிழக்கு | 15.1 | 19.8 | 55.8 |
| வட மத்திய | 11.7 | 16.2 | 62.8 |
| வட மேல் | 9.9 | 24.7 | 56.1 |
| வட | 11.9 | 28.2 | 50.6 |
| சப்பிரகமுவா | 8.6 | 28.1 | 54.0 |
| தென் | 14.1 | 16.5 | 60.1 |
| ஊவா | 8.7 | 44.2 | 37.8 |
| மேல் | 2.1 | 31.5 | 57.1 |
| **இலங்கை** | **7.7** | **27.4** | **55.7** |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

அ. உற்பத்தி சரிப்படுத்தல் மீதான வரி மற்றும் உதவு தொகைகளின் சதவீதப் பங்கு உள்ளடக்கப்படாமையினால் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் சதவீதப் பங்குகளின் சேர்த்தல் 100 இற்கு சமப்படுத்தப்படவில்லை.
ஆ. தற்காலிகமானது.

தேசிய உள்நாட்டு உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கமைவாக, மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வேளாண்மை நடவடிக்கைகளிலிருந்தான பங்களிப்பு அனைத்து மாகாணங்களிலும் 2.1 தொடக்கம் 15.1 வரையான வீச்சில் குறைவாகவிருந்தது. 2017 காலப்பகுதியின் போது கிழக்கு மாகாணம் 15.1 சதவீத கொண்ட அதிகூடிய பங்கினை பதிவுசெய்தது. இதற்கு அரிசி மற்றும் கடல்சார் மீன்பிடி உற்பத்தி வழிகோலியிருந்தது.